**வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேபர் கம்பனி – 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேபர் கம்பனியின் (“கம்பனி”) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பந்தி 1.5 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்ககளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிறகு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்ககளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச்செலவு தொடர்பான உண்மையான காசுப்பாய்ச்சல் ரூபா 74,168,000 காணப்பட்டது. எனினும், இது ரூபா 75,486,000ஆக பதிவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக செயற்பாட்டு காசுப்பாய்ச்சல் ரூபா 1,318,000 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை காசுப்பாய்ச்சலுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரிவு 7.14 இற்கு முரனானது. | அடுத்த ஆண்டில் இவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் ஏற்பாடுகளுக்கமைய காசுப்பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 1,182,000,000 கிரயமான ஆதனம் பொறி, உபகரணங்கள் அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்து கின்றமை ஆதனம் பொறி, உபகரணங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரிவு 17.19 இற்கு முரனானது. | நிலையான சொத்து மெய்யாய்வு மற்றும் கணக்கிணக்கம் என்பன செயற் பாட்டில் காணப்படு வதுடன் இது பீடிஓ (BDO) கன்சல்டிங் (தனியார்) கம்பனி யின் நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முழுமையாக தேய் விடப்பட்ட சொத் துக்கள், அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட் காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக் கீடானது இயைபு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 583,746,000 தொகையானது வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களின் கீழுள்ள ஊழியர் நலக்கடப்பாடுகள், இந்நியமத்தின் பிரிவு 28.15(அ) இனால் வேண்டப்பட்டதன்படி இற்றைப் பெறுமதியில் கணிப்பிடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரிவு 28.19 இன் படி, வரையறுக் கப்பட்ட நலக் கடப்பாடுகளை கணிப்பிடுவதற்கு கம்பனி எளிமைப் படுத்தல்களை பயன்படுத்தியுள்ளது. | நியமத்தின் இற்றைப் பெறுமதியில் கணிப்பிடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆறு (06) வகை இருப்பு உறுப்படிகள் தொடர்பான இருப்புப் பேரேட்டு மீதிக்கும் பௌதீக ரீதியாக மெய்யாய்வு செய்யப்பட்ட இருப்பு மீதிக்கும் இடையே ரூபா 4,061,664 ஆன திரண்ட வேறுபாட்டுத் தொகை அவதானிக்கப்பட்டது. | கணக்கிணக்கச் செயற்பாட்டின் போது வேறுபாட்டுக்கான காரணங்கள் இனங்கா ணப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் இவை நிவர்த்திச் செய்யப்படும். | வேறுபாடுகளை நீக்கும் பொருட்டு கணக்கணக்கம் செய்யப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 828,751,000 பெறுமதியான வியாபார கடன்பட்டோர் காணப்படுகின்றனர் இவற்றில் ரூபா 635,362,202 பெறுமதியான 679 கடன்பட்டோருக்கு உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் 2019 ஏப்ரல் 08 இல் உள்ளவாறு ரூபா 37,144,202 பெறுமதியான அல்லது 679 கடன்பட்டோரில் 06 சதவீதமான 41 கடன்பட்டோர்கள் மாத்திரமே பதில் அளித்திருந்தனர். பதிலளித்த 41 வியாபார கடன்பட்டோர்களில் ரூபா 16,440,483 பெறுமதியான 21 கடன்பட்டோர் மாத்திரமே கம்பனியின் மீதிகளுடன் உடன் பட்டிருந்தனர். மேலும் ரூபா 114,375,569 பெறுமதியான கடன்பட்டோர் தொகைகள் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவைகளாக இருந்தன அவற்றில் ரூபா 31,260,774 ஆன தொகை அறவிடப்படும் முடியாதவைகளாக சட்டப் பிரிவுக்கு மாற்றப்பட்டிருந்தன. | உறுதிப்படுத்தல் கடிதங்களுக்கு எவ்வித பதிலும் (உடன்படுதல் அல்லது உடன்படவில்லை) வழங்கப்படாத போதிலும் 2018 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிலுவைகளில் பெரும்பாலானவை 2019 ஏப்ரல் 24 இல் தீர்வை செய்யப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் பதிவுகளை அதன் வாடிக்கையாளர்களின் பதிவுகளுடன் இணக்கம் செய்ய ஒரு முறைமை நிறுவப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 டிசம்பர் 31 ல் உள்ளவாறு சந்தாதாரர் நிலுவை ரூபா 8,279,137 ஆக காணப்பட்டது. இவற்றில் 4,006,615 தொகை 2011 இருந்து 2015 வரை நிலுவையாக காணப்பட்டதுடன் இத்தொகையை மீட்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் இவ்வருடத்தின் இறுதிவரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அறவிடமுடியாத கடன்களை குறைக்கும் வகையில் அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் கடன் வசதிகளை வழங்குவதற்கு 2017 இல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சந்தாதாரர்களுக்கு பத்திரிகைகளை விநியோகிக்கும் போது அறவீடுகள் கண்காணிப்பு செய்யப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்ற வற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகார சட்டத்தின் 114(1) ஆம் பிரிவு அல்லது 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமான வரி சட்டத்தின் 83 ஆம் பிரிவு (2018 ஏப்ரல் 01 இலிருந்து) மற்றும் 2003 ஜீன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்கம் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு | 2018 ஏப்ரல் தொடக்கம் 2019 மார்ச் வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர்களுக்கான உபகார கொடுப்பனவு தொடர்பில் ரூபா 3,894,137 ஆன உழைக்கும் போதே செலுத்தும் வரியினை உரிய ஊழியர்களிடமிருந்து கழிப்பனவு செய்யாது கம்பனி செலுத்தியிருந்நது. | 2006 இன் 10ஆம் இலக்க உள்நாட்டு வருமான வரிச் சட்டத்திற்கு ஏற்ப உழைக்கும் போது செலுத்தும் வரி கணிப்பீடு செய்யப்பட்டு செலுத்தப்பட்டுள்ளது . | உழைக்கும் போது செலுத்தும் வரி ஊழியர்களிடம் இருந்து கழிப்பனவு செய்யப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2003 ஜீன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்கம் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவு | இச்சுற்றறிக்கையினால் வேண்டப் பட்டதன்படி கம்பனி தனது ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்திற்கு பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொதுத்திறைசேரியின் சம்மதத்தையும் சபை மற்றும் பொருத்தமான அமைச்சின் அனுமதியையும் பெற்றிருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் ஏஎன்சிஎல் உட்படவில்லை எனவே விவரிக்கப்பட்ட சுற்றுநிருபம் பொருத்தமானதாக இல்லை | கம்பனி பொது முயற்சிகள் சுற்றுநிருபங்களிலிருந்து விலகிச் செல்ல வேண்டுமெனில் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் இருந்து ஒரு நெறிப்படுத்தலை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | 2015 ஜுன் 17 ஆம் திகதிய பீஈடி3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பனி அரச உடமை முயற்சி ஒன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிதி யமைச்சினால் அல்லது பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விதிக் கப்படும் எவ்வித நெறிப்படுத் தல்களையும் இற்றைவரை கம்பனி பின் | பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் ஏஎன்சிஎல் உட்படவில்லை எனவே விவரிக்கப்பட்ட சுற்றுநிருபம் பொருத்தமானதாக இல்லை | கம்பனி பொது முயற்சிகள் சுற்றுநிருபங்களிலிருந்து விலகிச் செல்ல வேண்டுமெனில் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் இருந்து ஒரு நெறிப்படுத்தலை பெற்றுக்கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பற்றியிருக்கவில்லை. அத்துடன் பீஈடி சுற்று நிருபங்களிலிருந்து விலக்குவதற்கான விடுவிப்பை கம்பனி பெற்றிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஈ) | 2003 இன் யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பீஈடி சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் வேறு அரசாங்க நிறுவன சேவைகளுக்காக எட்டு பத்திரிக்கையாளர்கள், நான்கு பதிப்பாசிரியர்கள், உதவிப் பொதுமுகா மையாளர்-தொழில்நுட்பம், படப்பிடிப்பாளர், செவ்வை பார்ப்பவர், உதவி முகாமையாளர் மற்றும் நிறைவேற்றுநர் ஆகியோர் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் சார்பில் சம்பளம், கூலி மற்றும் படிகளாக ரூபா11,962,607 இணை கம்பனி செலவிட் டிருந்தது. மீளாய் வாண்டில் எட்டு பத்திரிக்கையாளர்கள் மற்றும் நான்கு பதிப்பா சிரியர்கள் விடுவிக் கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் நாற்பத்தைந்து பத்திரிகை யாளர்கள் மற்றும் இருப்தேழு பதிப்பாசிரி யர்கள் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | முகாமை அவர்களை சம்பளத்துடன் விடுவிப்பதற்கு அனுமதி அளித்துள்ளது. | 2003 இன் யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பீஈடி சுற்றறிக்கையை கம்பனி கடைபிடிக்க வேண்டும். |
| (உ) | 1981 ஒக்டோபர் 14 இன் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் விசேட வர்த்தமானி இலக்கம் 162/5 இல் பத்திரிகையாளர்களுக்கான விழுமியநெறிக் கோவை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளித் தரப்பினரால் கம்பனிக் கெதிராக ஒரு புலமைச் சொத்து விடயமான வழக்கு மற்றும் பதினான்கு அவதூறு வழக்குகள் தொடரப் படடிருந்தன. கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட இரண்டு அவதூறு வழக்கு கள் தோல்வி அடைந்த தன் பின்னர், ரூபா 5,193,912 தொகை அவ் விருவாதிகளுக்கும் மீளாய்வாண்டில் கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | ‘‘ஒழுக்க நெறிக் கோவை’’யை பத்திரிகையாளர்கள் பின்பற்றி இருப்பின் அவதூறு வழக்குகளை குறைத்துக்கொள்ள முடியும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 166,227,000 தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 243,660,000 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 409,887,000 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அச்சிடல் பொருட்களுக்கான உயர் விலை காரனமாக விற்பனைக்கிரயம் அதிகரித்தமை வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

கடந்த நான்கு வருடங்களிற்கான மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில், கம்பனியின் பெறுமதி சேர்மானங்கள் 2014 இலிருந்து 2018 வரை ஏற்ற இறக்கங்களாக காணப்பட்டன. சம்பளம், வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன சாட்டுதல் செய்யப்பட்ட பின்னரான (பங்குலாபத்திற்கு முன்னர்) 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்கான கம்பனியின் பெறுமதி சேர்மானமானது முறையே ரூபா 2,025,767,000 மற்றும் ரூபா 1,756,556,000 ஆக காணப்படுவதுடன் இது 2018 இல் 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **2018 சதவீதம்** | **2017 சதவீதம்** |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 44.33 | 55.32 |
| இலாப அளவு (விற்பனைக் கிரயத்தின் மீது மொத்த இலாபம்) | 79.63 | 123.81 |
| புரள்வு மீதான நிர்வாகக் கிரயம் | 38.81 | 36.96 |
| புரள்வு மீதான விற்பனை விநியோகக் கிரயம் | 12.25 | 11.96 |
| புரள்வு மீதான நிதிக் கிரயம் | 2.54 | 2.29 |
| நடைமுறை விகிதம் | 1.59 | 2.46 |
| அமிலப் பரிசோதனை விகிதம் | 0.89 | 2.05 |
| ஈடுபடுத்திய மூலதனத்தின் மீதான வருவாய் வீதம் | (13) | 35 |
| இணைப்பு விகிதம் | 14 | 18 |

கம்பனியின் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப எல்லை மற்றும் இலாப அளவு விகிதங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 10.99 மற்றும் 44.18 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது புரள்வின் மீதான நிர்வாக கிரயம் மற்றும் விற்பனை விநியோக கிரயம் என்பன சிறிய அளவில் குறைவடைந்துள்ளது. இணைப்பு விகிதம் 18 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக குறைவடைந்துள்ளதுடன் ஈடுபடுத்திய மூலதனத்தின் மீதான வருவாய் வீதம் 48 சதவீதத்தினால் வீழ்ச்சியடந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் இரு துனைக் கம்பனிகளான வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனி (முன்னர் வரையறுக்கப்பட்ட பிஸ்னஸ் லங்கா ஏஎன் (தனியார்) கம்பனி என அறியப்பட்ட), மற்றும் வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி (முன்னர் வரையறுக்கப்பட்ட இன்போ மீடியா (தனியார்) கம்பனி என அறியப்பட்ட) என்பன 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 25,884,625 மற்றும் ரூபா 13,139,185 தொகையான திரண்ட நட்டத்திற்கு உள்ளாகி இருந்தன. இத்துனைக்கம்பனிகள் முழுமையாக கம்பியின் மீது தங்கியிருந்ததன் விளைவாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடி இத்துனைக் கம்பனிகளிடமிருந்து கம்பனிக்கு பெறவேண்டிய தொகைகளாக முறையே ரூபா 22,534,489 மற்றும் ரூபா 10,594,185 ஆக காணப்பட்டன. மேலும், தொடர்ச்சியான வணிக நட்டம் எதிர்க்கணிய தொழிற்படு மூலதனம் மற்றும் எதிர்க்கணிய திரவத்தன்மை எல்லை என்பன காரணமாக 2018 பெப்ரவரி 15 இல் பணிப்பாளர் சபை இத்துணைக் கம்பனிகளை கலைப்பதற்கான ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தது. | இத்துணைக்கம்பனிகளின் தொடர்ச்சியான வணிக நட்டம் எதிர்க்கணிய தொழிற்படு மூலதனம் மற்றும் எதிர்க்கணிய திரவத்தன்மை எல்லை என்பன காரணமாக முகாமை இவ்விரு துணைக்கம்பனிகளின் வணிக நடவடிக்கைகளை கலைப்பதற்கான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடையக்கூடிய வகையில் முகாமை துணை கம்பனிகளை நெறிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | ஆதன மேம்படுத்தல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக 1985 இல் தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் புரொபெடி டிவலொப்மன்ட் (தனியார்) கம்பனி, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து எவ்வித காசுப் பாய்ச்சலையும் உருவாக்கியிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் புரொபெடி டிவலொப்மன்ட் (தனியார்) கம்பனி 1985 ஆம் ஆண்டு முதல் செயற்படாத ஏஎன்சீஎல் இன் ஒரு துனைக்கம்பனியாகும். | செயற்படாத நிறுவனம் என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,748,171 பெறுமதியான 151 மதிப்பழந்த காசோலைகள் இருந்தன. இவற்றில் ரூபா 1,981,878 | குறித்துக் கொள்ளப்பட்டது. மதிப்பிழந்த காசோலைகளை குறைப்பதற்கு கடன் செயற்பாடுகள் மற்றும் கடன் கட்டுப்பாடுகள் மற்றும் | நடைமுறையில் நிலவும் முறைமையை சிரத்தையுடன் கண்காணித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான 66 காசோலைகள் மற்றும் ரூபா 1,279,588 பெறுமதியான 27 காசோலைகள் முறையே 5 வருடங்கள் மற்றும் 3 வருடங்களிற்கு மேற்பட்டு தொடர்ந்து நிலுவையாகக் காணப்படுகின்றன. | என்பவற்றை நாம் இறுக்கப்படுத்தும் செயற்பாட்டில் இருப்பதுடன் மதிப்பிழந்த காசோலைகள் காரணமாக எழுந்த நிலுவைகளை அறவிடுவதற்கான ஏற்புடைய நடைமுறைகளை தொடர்ச்சியாக பேணி வருகின்றோம். | வேண்டும். |
| (ஈ) | வரையறுக்கப்பட்ட லங்கா புவத் கம்பனியிடம் இருந்து (இலங்கை தேசிய செய்தி முகவர்) 2008 திசெம்பரில் 1200 எண்ணிக்கையான பங்குகள் கொள்வனவிற்காக இடைக்கால கொடுப்பனவாக ரூபா 1.2 மில்லியன் தொகையினை கம்பனி செலுத்தியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் இம் முதலீட்டில் இருந்து எவ்வித திரும்பல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017இல் லங்கா புவத் கம்பனி தொடர்பில் மூன்று ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கூலிகளாக வழங்கப்பட்டிருந்த திரண்ட தொகை ரூபா 2,151,146 2018 திசெம்பர் 31 வரையிலும் வருமதிகளாக காட்டப்பட்டிருந்தன. | எல்கேபிபீ (LKPB) சபை தீர்மானம் 202.17இன் படி, ஏஎன்சிஎல் (ANCL) வரையறுக்கப்பட்ட லங்கா புவத் தனியார் கம்பனியின் 1200 பங்குகளில் முதலீடு செய்துள்ளது. இரண்டு ஊழியர்கள் பதவியிலிருந்து விலகி இருப்பதுடன் ஒரு ஊழியர் 2018 ஆம் ஆண்டில் ஏஎன்சிஎல் (ANCL) பதவியணியுடன் இணைந்து உள்ளார். | முதலீட்டினால் ஒரு திரும்பல் உருவாக்கப்படல் வேண்டும். |
| (உ) | 720 நாட்களுக்கு மேலாக நிலுவையாக இருந்த ரூபா 4,552,559 பெறுமதியான நான்கு கடன்பட்டோர்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான துணை ஆவணங்கள் தொலைந்திருப்பதன் காரணமாக அவர்களுக்கெதிராக நடவடிக்கைகள் கம்பனியினால் எடுப்பதற்கு முடியாதிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. இதனை நிவர்த்தி செய்வதற்கும் இவ்வாறு எதிர்காலத்தில் நிகழ்வதை தவிர்ப்பதற்குமான படிமுறைகள் எடுக்கப்படுகின்றன. | ஆவணங்களை வைத்திருப்போருக்கான பொறுப்புகள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2014 இல் கம்பனி, அரச நிறுவனங்களுக்கு ரூபா 2,209,560 பெறுமதியான 192,665 எண்ணிக்கையான "புதுசரண" பருவகால சஞ்சிகையை வழங்கி யிருந்தது. எனினும், எந்தவித வசூலிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது 2015 தொடக்கம் இத்தொகை முழுவதற்குமான ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 டிசம்பர் 31 வரை நிலுவையாக தொடர்ந்தும் | இதனை நிவர்த்தி செய்வதற்கும் வசூலிப்பதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவைகளை கிரமமாக அறவிடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும். |

காணப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (எ) | ரூபா 656,115,000 கிரயமான இறுதி இருப்புகள் கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதி என்பவற்றில் குறைவான தொகை கருத்திற்கொள்ளப்படாது பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளது. | எல்லா இருப்புக்களும் நுகரத்தக்கவை மற்றும் வியாபார இருப்புக்கள் அற்றவை எனவே நாம் மதிப்பீட்டு விற்பனை பெறுமதியை கருத்திற் கொள்ளவில்லை கம்பனி இருப்புகளை கிரய பெறுமதி அடிப்படையிலேயே மதிப்பிட்டு வருகின்றது. | நுகரத்தக்க பொருட் களாக இருப்பினும் பெறுமதி மதிப்பீடா னது கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதி என்பவற்றில் குறை வான தொகையில் பெறுமதி மதிப்பி டப்படல் வேண்டும். |
| (ஏ) | கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு களுக்கான கடப்பாடுகளை தீர்ப்பதற்கு சிறந்த முறையில் பகுத்தாய்ந்து மதிப்பீடு செய்யாது, ஒவ்வொரு வருடமும் நிலையான தொகை ரூபா 20,000,000 ஏற்பாடு செய்யப்படுகின்றது. | சட்ட வழக்குகளுக்கு வழங்குவதற்காக சிறந்த மதிப்பீடுகள் செய்யப்பட்டு பிரயோகிக்கப்பட்டுள்ளன. | நிலுவைவுள்ள வழக்குகள் தொடர்பில் கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு சிறந்த மதிப்பீட்டை மேற்கொள்ளும் முன்னர் ஒவ்வொரு வழக்குகளும் தனித் தனியாக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

---

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி 07 வகையான செய்தித்தாள்களையும் 10 வகையான பருவகால சஞ்சிகைகளையும் மீளாய்வாண்டில் பிரசுரித்திருந்த அதேவேளை முன்னைய ஆண்டில் 06 வகையான செய்தித்தாள்களையும் 12 வகையான பருவகால சஞ்சிகைகளையும் பிரசுரித்திருந்தது. 2018இல் கம்பனியினால் ''ரெச'' என பெயரிடப்பட்ட ஒரு பத்திரிகை அறிமுகம் செய்யப்பட்டதுடன் குறைவான வாசகர் அபிமானம் காரணமாக ''சித்மின'', ''மிகிதுர'' மற்றும் தெனமுது'' என பெயரிடப்பட்ட மூன்று பருவகால சஞ்சிகைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | அடுத்த மூன்றாண்டு காலத்திற்கான லேக்ஹவுஸ் கூட்டிணைந்த தந்திரோபாய திட்டத்தின் பரிந்துரையின்படி 2018 ஜனவரியில் ''ரெச'' தினசரி பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. பத்திரிகை வாசிப்பேரின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதனால் இள வயதினரின் வாசிப்பை கவரும் வகையில் இப்பத்திரிகை தொடங்கப்பட்டது. ஸ்ரீலங்கா டெலிகொம் உடனான அனுசரணை பொதி ஒன்றாகவே ''சத்மடல'' சஞ்சிகை அறிமுகப்படுத்தப்பட்டது. | அதிக வாசகர்களை கவரும் வகையில் கம்பனி சாத்தியப்பாடுகளை மதிப்பீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் 2018 ‘‘சத்மடல’’ என பெயரிடப்பட்ட ஒரு பருவகால சஞ்சிகையும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பிரதான ஆறு வகை பத்திரிகைகளிலிருந்து 1,419,821 எண்ணிக்கையான பிரதிகள் மற்றும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ‘‘ரெச’’ பத்திரிகைகளிலிருந்து 126,772 எண்ணிக்கையான பிரதிகளும் ஒட்டு மொத்தமாக 2018 இல் 1,546,593 பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தன.<br>மேலும், 10 வகை பருவகால சஞ்சிகைகளிலிருந்து 88,090 எண்ணிக்கையான பிரதிகள் 2018 இல் இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தன.<br>முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 இல் ஒட்டு மொத்தமாக இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தன வெளியீடுகளின் எண்ணிக்கை 187,681 ஆல் அல்லது 13 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் இவற்றின் பெறுமதி ரூபா 109,142,884 ஆகவும் காணப்பட்டது. | ‘‘ரெச’’ பத்திரிகை சந்தை வாய்பை மேம்படுத்துவதற்காக ஆரம்பத்தில் இலவசமாக விநியோகிக்கப்பட்டது. பிரதான பத்திரிகைகளில் மிகச்சுதந்திரமாக செய்தி உள்ளடக்கங்களை தயாரித் தளித்தல் மற்றும் உள்ளடக் கத்தின் தரத்தினை விருத்தி செய்தல் போன்ற மாற்றங் களும் செய்யப்பட்டது. எனவே, பெருநிறுவனங்கள் மற்றும் செழுமை மிக்க விளம்பரதாரர்களுக்கும் இம்மாற்றங்கள் பற்றி விழிப்புனர்வை ஏற்படுத்து வதற்காக பத்திரிகைகளை விநியோகிப்பதனூடாக அதிக மேம்படுத்தல் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. | இலவச பத்திரிகை பெறும் தரப்பினரை அவ்வப்போது இற்றைப்படுத்த வேண்டியதுடன் இவற்றை குறைப்பதற்கு முயற்சிக்கவும் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் 7 பத்திரிக் கைகள் மற்றும் 10 பருவகால சஞ்சிகைகள் என்பவற்றின் மொத்த விற்பனை திரும்பல்களாக 4,433,869 பிரதிகள் காணப்பட்டன. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 40 சதவீத அதிகரிப்பாகும். 2018 இல் அறிமுகப்படுத்தபட்ட ‘‘ரெச’’ பத்திரிக்கையின் உற்பத்தியில் 27 சதவீதமானவை திருப்பப்பட்டிருந்தமை உயர்வான திரும்பலாக பதிவாகியிருந்தது. | ‘‘ரெச’’ ஆரம்பிக்கபட்டதன் பின்னர், முதல் சில மாதங்களில் விற்பனை நிலையங்களில் பத்திரிகை கிடைப்பனவை ஏற்படுத்துவ தற்காக பத்திரிக்கை முகவர்களிற்கு மேலதிக பிரதிகள் அனுப்பபட்டன. பத்திரிக்கைகளுக்கான உண்மையான கேள்வியினை சரியாக மதிப்பீடு செய்ய முடியாது என்பதால் ஏதேனும் பதிதிரிக்கையின் அறிமுக காலத்தில் இதுவே யதார்த்தமான நியமமாக காணப்படுகிறது. ஆரம்பத் தில் 50% ஆக காணப்பட்ட திரும்பல்கள் தற்போது அண்ணளவாக 17% - 18% ஆக குறைவடைந்துள்ளது. | பத்திரிகை திரும்பல்களை குறைப்பதற்கு பகுப்பாய்வுகள் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 2018ஆம் ஆண்டில் ‘‘சண்டே | இக்கைத்தொழிலில் பத்திரிகை | அதிக வாசிப்போரை |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்ஸேவர்'', ''டெய்லி நிவ்ஸ்'' ''தினமின'' மற்றும் ''சிலுமின'' போன்ற பதிதிரிக்கைகளின் விற்பனை செய்யப்பட்ட பிரதி களின் எண்ணிக்கை 5 சத வீதத்திலிருந்து 12 சதவீத மான வீச்சில் குறைவடைந் திருந்தன. எனினும் தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்தி ரிகைகளின் விற்பனை செய் யப்பட்ட பிரதிகளின் எண் ணிக்கை முறையே 3 மற்றும் 4 சதவீதத்தினால் அதிகரித் திருந்தன. ''தருணி'', ''மான்சு'' மற்றும் ''சுபசெத'' போன்ற பருவ கால சஞ்சிகைகளின் பிரதிகளின் விற்பனையும் 9 சதவீதத்தி லிருந்து 11 சதவீதமான வீச்சில் ஒரு பொருன்மையான பின்னடைவை காட்டுகின்றன. | விற்பனையில் ஒரு ஒட்டுமொத்தமான வீழ்ச்சி காணப்படுகின்றது. 2018 இன் இறுதிக் காலாண்டில் அச்சிடல் தாமதங்களினால் சந்தையை தாமதமாக அடைய நேர்ந்ததன் விளைவாக விற்பனை குறைவடைந்திருந்தது.<br><br>மூன்று பருவகால சஞ்சிகைகளின் விற்பனை விலை அதிகரித்தமையும் சிறியளவான விற்பனை வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தன. | கவர்ந்திழுப்பதற்கு கம்பனி சாத்தியமான வாய்ப்புக்களை மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (உ) | புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ''ரெச'' பத்திரிகையின் விற்பனை வருமானம் தவிர்த்து ஏனைய 06 பத்திரிகைகளின் வருமானம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 3 சதவீதத்தால் குறைவடைந் திருந்தன. எனினும், 2018இல் நான்கு பத்திரிகைகளினதும் விற்பனை விலைகள் கம்பனியினால் அதிகரிக்கப்பட்டிருந்தன. | விளம்பர வருமானத்தை உயர்த்துவதற்கும் அச்சிடல் தரத்தை அதிகரிக்கும் வகையிலும் பிரதான பத்திரிகைகளை கொஸ் மெக்னம் அச்சில் (Goss Magnum press) அச்சிடுவதற்கு முகாமை தீர்மானித்தது. இவற்றுக்கு வசதி அளிப்பதற்கான ஒரு புதிய அச்சு எந்திரத்தை கொள்வனவு செய்தல் தவிர வேறு மாற்று வழிகள் இல்லாமையினால் வர்த்தக அச்சிடலை நிறுத்தி செய்தி பத்திரிகைகளை அச்சிடுவதற்காக கொஸ் மெக்னம் அச்சின் (Goss Magnum press) இயல் அளவை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | அதிக வாசிப்போரை கவர்ந்திழுப்பதற்கு கம்பனி சாத்தியமான வாய்ப்புக்களை மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (ஊ) | வர்த்தக அச்சிடல்கள், விசேட வெளியீடுகள் மற்றும் எண்மான (Digital) அச்சிடல்கள் என்பவற்றிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 இல் முறையே 13%, 21% மற்றும் 63 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தன. | பிரதான பத்திரிகைகளை கொஸ் மெக்னம் அச்சில் (Goss Magnum press) அச்சிடுவதற்கு முகாமை தீர்மானித்தது. இவற்றுக்கு வசதி அளிப்பதற்கான ஒரு புதிய அச்சு எந்திரத்தை கொள்வனவு செய்தல் தவிர வேறு மாற்று வழிகள் இல்லாமையினால வர்த்தக அச்சிடலை நிறுத்தி செய்தி | உயர்ந்தபட்ச வருவாயை தருகின்ற கருத்திட்டங்கள் பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பத்திரிகைகளை அச்சிடுவதற்காக கொஸ் மெக்னம் அச்சின் (Goss Magnum press) இயல் அளவை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | |
| (எ) | அதிக விளம்பரங்களை கவரும் வகையில் விளம்பர அல்லது விற்பனை முகாமையாளர் களுக்கு ஒரு ஊக்கப்படுத்தல் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்த போதிலும் ''ரெச'' பத்திரிகைகளில் இருந்து பெற்றுக்கொண்ட விளம்பர வருமானம் தவிர்ந்த ஏனைய ஒட்டுமொத்த விளம்பர வருமானங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபாய் 6,357,000 இனால் குறைவடைந்திருந்தது. மேலும் 2018 ஜனவரி 1ல் இருந்து அமுலுக்கு வரும் வகையில் ''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'' மற்றும் வாரமஞ்சரி என்பவற்றிற்கான சாதாரண விளம்பரக் கட்டணங்களை கம்பனி அதிகரித்திருந்தது. | 2018 இன் செப்டம்பர் வரையான ஒட்டுமொத்த விளம்பர வருமானங்கள் முன்னைய ஆண்டின அதே காலப்பகுதிக்கான வருமானங்களை விட அதிகமாக காணப்பட்டது. விளம்பரப் போக்குகளின் படி வழமையில் வருடத்தின் இறுதி காலாண்டில் விளம்பர வருமானங்கள் மிக அதிகமாக் காணப்படும் என்பதால் முன்னைய ஆண்டை விட இறுதி கால விளம்பர வருமானம் 5 சதவீதம் அதிகரிக்கும் என நாம் நம்பிக்கை கொண்டிருந்தோம் எனினும், நாட்டின் அரசியல் நிலைமைகள் இயல்புக்கு திரும்பாமை காரணமாக 2018இன் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாத விளம்பர வருமானத்தின் நிலையை மோசமாக பாதித்தது இதன் காரணமாகவே வீழ்ச்சியுற்றது. | முகாமையானது பத்திரிக்கை மற்றும் பருவகால சஞ்சிகைகள் என்பவற்றின் சந்தைப் பங்கை அதிகரிப்பதற்கும் விளம்பர வசதிகளை அதிகரிப்பதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீடமைப்பு திட்ட மொன்றை நிர்மாணிப் பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஹோகந்தர விலுள்ள 8 ஏக்கர் விஸ்தீரணமுடைய காணி 1985ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்படுகிறது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2013 இல் ஹோகந்தரவிலுள்ள காணி ஏஎன்சிஎல் (ANCL) இற்கு உரிமை மாற்றப்பட்டு 2016 ஆம் ஆண்டில் விஆர்எஸ் மற்றும் தொழிற்படு மூலதனம் போன்றவற்றிற்காக கடன் பெறுவதற்கு கொமர்சியல் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளது. | பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்திற்குத்திற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை வருவாய் உருவாக்கு வதற்கு சொத்தை கம்பனி பயன்படுத்த வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி 2012 ஜுன் 01இல் தயாரிக்கப்பட்டிருந்த பதவி அணி பட்டியலுக்குப் பதிலாக 2017 ஜுன் 06 இல் ஒரு பதவி அணிப்பட்டியலை தயாரித்திருந்தது. எனினும், 2019 மே 13 ஆம் திகதி வரையிலும் அப்பதவி அணிக்கான சபையின் அனுமதியை பெற்றிருக்கவில்லை மேலும் 2017இல் தயாரிக்கப்பட்ட பதவியின் படி பொது மற்றும் பதிப்புத் துறை பதவிகள் முறையே 658 மற்றும் 327 ஆக காணப்பட்டது. எனினும், 2018 டிசம்பர் 31 ல் உள்ளவாறு பொது மற்றும் பதிப்புத்துறைகளின் உண்மையான பதவியணி (ஒப்பந்த அடிப்படை ஊழியர்கள் 468 உள்ளடங்களாக) முறையே 1088 மற்றும் 558 ஆக காணப்பட்டது. | பதிப்புத்துறை- 327 மற்றும் பொது நிர்வாகம்-658 என முன்மொழியப்பட்ட பதவியணிப் பட்டியலானது லேக்ஹவுஸ் இற்காக அபிவிருத்திச் செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் தந்ரோபாய திட்டத்தினையும் தன்னிச்சையாக மற்றும் திட்டமிடப்படுகின்ற அல்லது செயற்பாட்டிலுள்ள (ஈஆர்பீ, விற்பனை, தகவல் தொழில் நுட்ப முறைமைகள், வலைப்பின்னல் தர முயர்வுகள்) போன்ற பலவற்றிலிருந்து எழுகின்ற வினைதிறமைகளை கருத்திற்கொண்டு 2017/06/06 இல் முகாமையால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவ் ஆளணி எண்ணிக்கையை நிலைத்திருக்கக்கூடிய வகையில் குறைப்பதற்கு இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வருடங்கள் லேக்ஹவுஸ் இற்குத் தேவைப்படலாம். தலைவரினால் இப் பதவியணி நிலைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | சபையினது அனுமதி பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | சிறந்த ஆளணி நிர்வாகத்திற்காக கம்பனி யால் திறன் கொள்ளல், பதவியுயர்வு, லீவுக்கொள்கை செயலாற்றல் முகாமைத்துவம் போன்றவை உட்பட ஏழு கொள்கைகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஓகஸ்ட் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் முகாமைத்துவ கொள்கைக்கு மாத்திரம் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்தது. | ஏழு மனிதவள கொள்கைகளுள் செயற்பாட்டு முகாமைத்துவ கொள்கைக்கு மாத்திரமே சபை அனுமதியளித்துள்ளது. மேலும் மனிதவள திணைக்களம் அனுமதிக்கப்படாத கொள்கைகளை மீள்பார்வை செய்வதுடன் சபையின் அனுமதிக்காத சமர்பிக்கப்படவிருகின்றது. | எல்லா கொள்கைகளுக்கும் சபையினது அனுமதி பெறப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனமொன்றின் உண்மையான பதவிநிலை எல்லைக்கேற்பவே ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவி உயர்வுகள் என்பன முறையாக அமல்படுத்தப்படல் வேண்டும். எனினும், 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான ஊழியர்களை அவர்களின் பதவி நிலைக்கேற்ப கம்பனியில் | எங்களது வெளியீடுகளின் உயர் நியமத்தை பேனுவதற்காக விசேடமாக பதிப்புத்துறை போன்ற சில திணைக்களங்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் சில ஊழியர்கள் | உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை அவர்களின் தொழில் வகுதிக்கேற்ப வகைப்படுத்த கூடிய முறையை கம்பனி |

| | | | |
|---|---|---|---|
| | வகைப்படுத்த முடியாது உள்ளது. | நியமிக்கப்பட்டுள்ளனர். | அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஈ) | கம்பெனியின் ஆட்சேர்ப்பு திட்டத்தில் பதவிக்கான வயது எல்லை மற்றும் ஆட்சேர்ப்பு விதம் (வெளிவாரி விளம்பரம்/ உள்ளக அறிவித்ததுடன் எழுத்துப் பரீட்சை/ நேர்முகப்பரீட்சை) என்பன கூட்டிணைக்கப்பட்ட இருக்கவில்லை. | வெளிவாறி அறிவித்தலின் போது வயது எல்லை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது அத்துடன் ஒவ்வொரு பதவிக்கும் ஆன நேர்முகப்பரீட்சை நடாத்தப் படுவதுடன் தேவைக்கேற்ப சில பதவிகளுக்கு எழுத்துப்பரீட்சையும் நடாத்தப்படுகின்றது. | ஆட்சேர்ப்பு திட்டமானது தேவைப்படுத்தப்பட்ட விபரங்களை கொண்டிருக்க வேண்டும். |
| (உ) | கம்பனியின் மேலதிக பணியாளர்களை குறைப்பதற்கு 2008, 2010 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் சுயமான பதவி விலகல் திட்டம் (VRS) அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் 991 ஊழியர்கள் கம்பனியிலிருந்து விலகி சென்றிருந்த போதிலும், 2008 செப்தெம்பர் 01 இலிருந்து 2018 டிசம்பர் 31 வரை 598 ஊழியர்கள் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | முகாமையின் சுய விருப்பின் அடிப்படையில் புதிய வெளியீடுகளை (“ரெச” பத்திரிகை, அமைச்சுக்களுடன் இணைந்து வெளியிடப்படும் சிறுபத்திரிகைகள்) அறிமுகப்படுத்துதல், ஆங்கில பத்திரிகைகளில் உயர் நியமத்தை பேனுதல் மற்றும் சமூக ஊடகங்களில் புதிய தொழில்நுட்ப புத்தாக்கங்களை வழங்குதல் போன்றவற்றிற்காக விசேடமாக பதிப்புத் திணைக்களங்களில் சில ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். | வீஆர்எஸ் இன் பின்னர் கிரமமாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு பிரயோக முறையில் வீஆர்எஸ் அமல்படுத்தப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் பிரதிநிதியொருவரின் அல்லது நிதி முகாமைத்துவத் திறன்களை கொண்ட ஆளொருவரின் தலைமையில் ஆகக் குறைந்தது நிறைவேற்றுத் தரமற்ற 03 சபை உறுப்பினர்களை கணக்காய்வு குழு உள்ளடகியிக்க வேண்டிய போதிலும், நிறைவேற்றுத் தரம் கொண்ட ஒரு பணிப்பாளர் கூட்டங்களை தலைமை தாங்கியிருந்ததுடன் அக்கூட்டங்களில் திறைசேரியின் எப்பிரதிநிதிகளும் பங்குபற்றியிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்காய்வு குழு பொருத்தமான நபர்களினால் கட்டமைக்கப்படல் வேண்டும். |